# இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

தொடர் - 10

## அல்குர்ஆனின் அழைப்பு

அல்குர்ஆனின் மனித குலத்தை ஓர் உன்னதமான இலக்கை நோக்கி அழைக்கிறது. ஆதன் அழைப்புகளில், இயற்கையை நோக்கிய அழைப்புகள் அனைத்தும் மனிதப் புலன்களை விளிக்கச் செய்கின்றன. நமக்குள்ளேயும், வெளியேயும், பிரபஞ்சத்திலுமாகப் பரவிக் கிடக்கும், அல்லாஹ் அமைத்துள்ளவற்றின் அழகை, மனித உணர்வுகள் அருந்த வேண்டுமென அது எதிர்பார்க்கிறது.

ஆனால், பல மதங்களும் நாகரிகங்களும் அதன் பிரதிநிதிகளும் இயற்கை அழகை, கல்லிலும் காகிதத்திலும் வடித்து, சிற்பத்தில் செதுக்கினரே தவிர, அவற்றுக்குப் பின்னால் அவற்றை இயக்கிக் கொண்டிருக்கும் ஏகனாகிய அர்ரஹ்மானைப் புரிந்து கொள்ளவில்லை. அல்லது சரியான புரிதலில் தவறிழைத்து விட்டனர்.

இறைவன் மனிதனை அழகிய உருவத்தில் வடிவமைத்திருக்கும் போது, தான் பார்க்காத இறைவனை, தன்னால் பார்க்கவும் ரசிக்கவும் முடியாத உருவங்களில் செதுக்கி,அதை வழிபட்டுக்கொண்டிருக்கின்றான் மனிதன். இறைவனை எந்த வடிவிலும் உருவமாக்கி வழிபடுவதை இஸ்லாம் வன்மையாக கண்டித்துள்ளது.

*“அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ, அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், அவர்களை அழைத்துப் பாருங்கள்! ஆவர்கள் உங்களுக்குப் பதில் தரட்டும்!*

*அவர்களுக்கு நடக்கின்ற கால்கள் உள்ளனவா? அல்லது பிடிக்கின்ற கைகள் உள்ளனவா? அல்லது பார்க்கின்ற கண்கள் உள்ளனவா? அல்லது கேட்கின்ற காதுகள் உள்ளனவா? உங்கள் தெய்வங்களை அழைத்து எனக்கெதிராகச் சூழ்ச்சி செய்யுங்கள்! எனக்கு எந்த அவகாசமும் தராதீர்கள்! என்று கூறுவீராக!*

*இவ்வேதத்தை அருளிய அல்லாஹ்வே எனது பொறுப்பாளன். அவனே நல்லோருக்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறான் என்றும் கூறுவீராக!)*

*அவனையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவிட இயலாது. தமக்கே அவர்கள் உதவ முடியாது.(07:194-197)*

“இயற்கையாகவே மனிதன் பால் அழகுணர்வு ரசணை அமைந்து காணப்படும் ஒரு பண்புதான். அவன் இயற்கையின் எழிலில், பச்சைப் பசேலென்ற பசுமையின் ஸ்பரிசத்தில், பாடும் பறவையினத்தில், கூவும் குயிலினத்தில், ஓடும் மானில், தேனின் சுவையில், தேனீயின் களி நடனத்தில், வண்டுகளின் ரீங்காரத்தில், தீண்டும் தென்றலில் மலர்களும், செடிகொடிகளும் ஆடி அசைவதில், சூரியனைக் காதலிக்கும் சூரிய காந்தியில், இவ்வாறு, அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகளில், மனிதன் அழகைத் தரிசித்து, அனுபவிக்கிறான்.

இந்தத் தரிசனம் அவனது உள்ளத்தில் நிறைவையும் நிம்மதியையும் விவரிக்க முடியாத இன்பக் களிப்பையும் ஏற்படுத்துகின்றன.

நிச்சியமாக நாமே (பூமிக்கு) அண்மையில் இருக்கும் **வானத்தை நட்சத்திரங்களின் அழகைக் கொண்டு அழகுபடுத்தியிருக்கின்றோம்.** (அல்குர்ஆன் 37:06)

அழகு பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆனிய வசனங்கள் ஆழமான கருத்துக்களைப் புலப்படுத்துகின்றன. தன்னிலே அழகான இறைவன், அழகை அவன் நேசிப்பதற்குச் சான்றாய் படைப்பினங்களையும் அழகுற அமைத்துள்ளான்.

**அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன். (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்.** (அல்குர்ஆன் 23:14)

படைப்பினங்கள் அனைத்தையும், அழகுற வடிவமைத்த அல்லாஹ்வின் மாட்சிமையையும், மகோன்னதத் தன்மையையும் உணர்த்தி, மனிதனின் அடிமை நிலையைச் சொல்லிக் கொடுத்து, அடிபணியத் தூண்டி, அல்லாஹ்வைப் புகழ வைக்கிறது அல்குர்ஆன்.

இவ்வாறு, அல்குர்ஆன் பல உதாரணங்களை மிக எளிமையாக அதேவேளை உயிரோட்டத்துடன் உவமையாக்கியுள்ளது. அது, இயற்கை அழகு பற்றிப் பேசும் போது, அவை உள்ளத்தை ஊடுருவிச் சென்று கொள்ளை கொள்கிறது.

உதாரணமாக **வல்லைலி இதா அஸ்அஸ** (இருட்டைக் கொண்டு வரும் இரவின் மீது சத்தியமாக!) இருட்டைக் கொண்டு வரும் என்ற பொருளுக்காக இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அரபி வார்த்தை **அஸ்அஸ** என்பதாகும். இது அஸ் அஸ் என்ற இரு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. இரவு நேரத்தில் காணப்படும் கருமை இருளின் உயிரோட்டத்தை, இசை லயத்துடனும் இலக்கிய இன்பத்துடனும் இந்த வார்த்தை சொல்லிக் காட்டுகின்றது.

இரவு, நம் கண்களுக்குப் புலப்படாத, தனது கால்களாலோ, அல்லது கைகளாலோ நள்ளிரவுக் காவலனைப் போல், காவல் புரிவதாக இந்த சொல்லாட்சியின் பொருள் விரிக்கின்றது. அஸ்அஸ என்ற வினைச் சொல்லுக்கு நள்ளிரவில் நகர்வலம் வந்து, காவல் புரிந்தான் என்ற பொருளும் உண்டும். இது, அற்புதமும் ஆச்சரியமுமான போற்றத் தக்க சொல்லாட்சியாகும்.

இதேபோன்று, வஸ்ஸுப்ஹி இதா தனப்பஸ (மெல்ல மெல்லப் புலரும் அதிகாலைப் பொழுதின் மீது சத்தியமாக!) இதுவும் முன்னர் குறிப்பிட்டது போன்ற ஓர் அரிய, மெச்சத்தக்க சொல்லாட்சியாகும். ஏன்? அதைவிடவும் இது ஓர் உயிரோட்டமான சொல்லாட்சியாகும். இங்கே, அதிகாலைப் பொழுது மூச்சு விரிவடைந்து கொண்டே வந்து, பளீரென அது விழித்து எழுவதைப் போலவும் சித்திரித்துக் காட்டப்படுகின்றது.

மெல்ல மெல்லத் தோன்றும் அந்த அதிகாலைப் பொழுதின் வெளிச்சமும், பொழுது விடிய ஒவ்வொரு உயிரிலும், பொருளிலும் ஏற்படும் புத்துணர்ச்சியும் இயக்கமுமே இங்கே மூச்சுகளாகச் சூட்டப்படுகின்றன.

விடிந்து கொண்டு வரும் காலைப் பொழுதை நாம் விழித்திருந்து கவனிக்கும் போது, புள்ளினங்களும் பிற உயிரனங்களும், உழவர்களும், வியாபாரிகளும் ஏன் உலகத்தின் ஒவ்வொரு பொருளுமே மெல்ல மெல்லத் தன் இயக்கங்களை ஆரம்பிக்கும் போதும், அதற்கேற்ப அந்தக் காலைப் பொழுது, கொஞ்சம் கொஞ்சமாக விடிந்து கொண்டே வரும் போதும், நம் கண் முன்னால், அந்த விடிகாலைப் பொழுது சுவாசிப்பதைப் போன்ற ஒரு பிரமை எழுவது நிஜம். அந்த உயிரோட்டமான அதிகாலைப் பொழுதின் விடியல் காட்சிகளைத் தான் இந்த சொல்லாட்சி அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**“வஸ்ஸுப்ஹி இதா தனப்பஸ”** என்ற இவ்விரு வசனங்களின் இலக்கிய அழகையும் நயத்தையும் ∴பீ ழிளாழில் குர்ஆன் என்ற தனது நூலில் விளக்கும் செய்யித் குதுப் “சிறந்த இலக்கிய வளம் கொண்ட, மிக உயிரோட்டமுள்ள, உவமான உவமேயங்களைக் கொண்ட அரபி மொழியானது, காலைப் பொழுதை வர்ணிப்பதற்கு, அல்குர்ஆன் இத்திரு வசனத்தில் பயன்படுத்தியிருப்பது போன்ற ஓர் உருவகத்தைக் கொண்டுள்ளதா என நான் சந்தேகிக்கிறேன். அரபி மொழியின் அனைத்து ஆக்கங்களும் கூட, அதிகாலைப் பொழுதை பற்றி இங்கே கையாளப்பட்டிருக்கும் சொல்லாட்சிக்கு ஈடு இணையாகாது என்று நான் துணிந்து சொல்வேன்” என்கிறார்.

இலக்கியச் சுவையை ரசிக்கும் திறனும் கற்பனை வளமும் பொருந்திய ஒவ்வொருவரும், இயற்கையை ரசிக்கும் ஒவ்வொரு ரசிகனும், இந்த வசனங்களில் நாம் வர்ணித்துக் காட்டியதை விடவும் அதிகமான சொல் வளத்தையும் அதியற்புதனமான, அரிய மெச்சத்தக்க பேருண்மைகளையும் இப்பிரஞ்சத்தின் எழிமையான தோற்றங்களையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகளையும் உணர்ந்து ரசிக்கலாம்! ஒரு மிகப் பெரிய இஸ்லாமியக் கவிஞனாகவே மாறிவிடும் அளவுக்கு அவ்வளவு கற்பனை வளத்தைப் பெறலாம்!

*இன்னும் வளரும்*